வகுப்பு : 12 | ஒரு மதிப்பெண் தேர்வு – 4 | மதிப்பெண்கள்: 40

தமிழ் | காலம் : 45 நிமிடங்கள்

I ...ான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக: 34 x 1 = 34

1. பொருத்துக.
   - அ) கடகம் - 1. புன்செய்
   - ஆ) ரோசி - 2. ஓலைப்பெட்டி
   - இ) பிஞ்சை - 3. திண்ணை
   - ஈ) திருணை - 4. உரசுதல்

   அ) 2,4,1,3 ஆ) 2,4,3,1 இ) 4,3,2,1 ஈ) 3,2,4,1
2. 'உரிமைத்தாகம்' – என்னும் சிறுகதை இடம்பெற்றுள்ள தொகுப்பு ___________
   அ) அறுப்பு ஆ) வயிறுகள இ) பூமணி சிறுகதைகள் ஈ) ரீதி
3. கீழ்க்கண்ட நூல்கள் சிறுகதை அல்லாதது எது?
   அ) நொறுங்கல்கள் ஆ) வயிறுகள் இ) அஞ்ஞாடி ஈ) அறுப்பு
4. பூமணியின் 'அஞ்ஞாடி' புதினம் சாகித்திய அகாதெமி விருது பெற்ற ஆண்டு________
   அ) 2014 ஆ) 2012 இ) 2004 ஈ) 1984
5. பூ.மாணிக்கவாசகர் இயக்கிய திரைப்படம்?
   அ) உதிரிப்பூக்கள் ஆ) கருவேலம்பூக்கள் இ) முள்ளும் மலரும் ஈ)இறைவி
6. உரிமைத்தாகம் என்ற சிறுகதை எதனோடு தொடர்புடையது?
   அ) தொழில் ஆ) வாழ்க்கை இ) குடும்ப உறவு ஈ) நில உரிமை
   (i) அனைத்தும் (ii) ஆ-மட்டும் (iii) அ-மட்டும் (iv) இ, ஈ
7. உரிமைதாகம் கதையில் வரும் பங்காருசாமிக்கு ________ தொழில்
   அ) கூலி ஆ) வழக்கறிஞர் இ) வேளாண்மை ஈ) கொடுக்கல், வாங்கல்
8. உரிமைத்தாகம் கதையின் முக்கிய கதைமாந்தர் _________
   அ) மூக்கம்மாள் ஆ) முத்தையன் இ) வெள்ளைச்சாமி ஈ) பங்காருசாமி
9. வெள்ளைச்சாமி தனது நிலத்தை அடகு வைத்த தொகை ரூ.?
   அ) ரூ.400 ஆ) ரூ.200 இ) ரூ.300 ஈ) ரூ.500
10. "ஆருக்குத்தான் சங்கடம் வரப்போகுதுன்னு தெரியல" என்ற கூற்றைக் கூறியவர்?
    அ) பங்காரு சாமி ஆ) வெள்ளைச்சாமி இ) மூக்கம்மாள் ஈ) முத்தையன்
11. விளக்கம்: இரட்டைகிளவிச் சொற்களைச் சேர்த்து எழுதவேண்டும்
    சான்று: பட பட எனச் சிறகை அடித்தது.
    அ) விளக்கம், சான்று இரண்டும் சரி. ஆ) விளக்கம் தவறு, சான்று சரி.
    இ) விளக்கம் சான்று இரண்டும் தவறு. ஈ) விளக்கம் சரி, சான்று தவறு.
12. பொருத்துக.
    - அ) பட பட - 1. உரிச்சொற்றொடர்
    - ஆ) உற்றாருறவினர் - 2. இரட்டைக்கிளவி
    - இ) கடிமணம் - 3. உம்மைத்தொகை

    (i) 3,2,1 (ii) 2,3,1 (iii) 1,2,3 (iv) 2,1,3
13. கீழக்காண்பனவற்றுள் சொற்றொடர் பிழை அல்லாத தொடர் எது?
    அ) சென்னையிலிருந்து நேற்று வந்தான் ஆ) கோவலன் மதுரைக்குச் சென்றது.
    இ) பறவைகள் வேகமாகப் பறந்தது. ஈ) அவன் செல்வியிடம் பேசினாய்.
14. பொருள் குழப்பமின்றி எழுதுவதற்குரிய காரணங்களுள் பொருந்துவதைத் தேர்க.
    அ) தேவையான இடங்களில் இடைவெளி விடாமல் எழுதுதல்.
    ஆ) தேவையற்ற இடங்களில் இடைவெளி விட்டு எழுதுதல்.
    இ) நிறுத்தற்குறிகளை உரிய இடங்களில் இட்டு எழுதுதல்.
    ஈ) வல்லின மெய்களைத் தேவையான இடங்களில் இடாமல் எழுதுதல்.
15. வல்லினம் மிகும், மிகாத் தொடர்களின் பொருளறிந்து பொருத்துக.
    - அ) பாலை பாடினான் - 1) தேரை என்னும் உயிரினத்தைப் பார்த்தான்.
    - ஆ) பாலைப் பாடினான் - 2) தேரினைப் பார்த்தான்
    - இ) தேரை பார்த்தான் - 3) பாலினைப் பாடினான்
    - ஈ) தேரைப் பார்த்தான் - 4) பாலைத்திணை பாடினான்.

    அ) 4,1,3,2 ஆ) 2,3,1,4 இ) 4,3,1,2 ஈ) 2,4,1,3
16. கடலின் பெரியது ___________
    அ) பயன் ஆராயமல் ஒரு செய்த உதவி ஆ) தினையளவு செய்த உதவி
    இ) உற்ற காலத்தில் செய்த உதவி ஈ) பயன் கருதி செய்த உதவி
17. 'அன்பும் அறனும்' - இச்சொல்லின் இலக்கணக்குறிப்பு.
    அ) எண்ணும்மை ஆ) பண்புத்தொகை இ) தொழிற்பெயர் ஈ) இடவாகுபெயர்.

18. செல்லிடத்து – புணர்ச்சி விதி தருக.
அ) உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே. ஆ) தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்.
இ) ஈறுபோதல், இனமிகல் ஈ) தன்னொற்றிரட்டல், உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இ.

19. பொருத்துக.

| பால் | அதிகாரம் |
|---|---|
| அ) இன்பம் | - 1. 38 |
| ஆ) பொருள் | - 2. 70 |
| இ) அறம் | - 3. 25 |

அ) 3,1,2 ஆ) 3,2,1 இ) 1,2,3 ஈ) 2,3,1

20. பொருத்துக.

| இயல் | அதிகாரம் |
|---|---|
| அ) பாயிரவியல் | - 1. 01 |
| ஆ) இல்லறவியல் | - 2. 13 |
| இ) துறவறவியல் | - 3. 20 |
| ஈ) ஊழியல் | - 4. 04 |

அ) 2,4,1,3 ஆ) 4,2,1,3 இ) 3,2,4,1 ஈ) 4,3,2,1

21. 133 அடி உயரமுள்ள திருவள்ளுவர் சிலை அமைந்துள்ள இடம் ________
அ) மதுரை ஆ) திருவள்ளூர் இ) திருநெல்வேலி ஈ) கன்னியாகுமரி

22. "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" – என்று பாடியவர்
அ) பாரதிதாசன் ஆ) கவிமணி இ) பாரதியார் ஈ) கண்ணதாசன்

23. பொருத்துக.

| | |
|---|---|
| அ) வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் | - 1. சேர்ந்தாரைக் கொல்லி |
| ஆ) பயன்தூக்கார் செய்த உதவி | - 2. ஞாலத்தின் மாணப் பெரிது |
| இ) சினம் | - 3. தெய்வத்துள் வைக்கப்படும் |
| ஈ) காலத்தினாற் செய்த நன்றி | - 4. நன்மை கடலின் பெரிது. |

அ). 3, 4, 2, 1 ஆ). 3, 4, 1, 2 இ).4, 3, 2, 1 ஈ).2, 4, 3, 1

24. வையகமும் வானகமும் ஆற்றலரிது – எதற்கு?
அ) செய்யாமல் செய்த உதவி ஆ) பயன்தூக்கார் செய்த உதவி இ) தினைத்துணை நன்றி ஈ) செய்ந்நன்றி

25. "வள்ளுவனைப் பெற்றதால்
பெற்றதே புகழ் வையகமே" எனப் - புகழ்ந்து பாடியவர்.
அ) பாரதிதாசன் ஆ) சுரதா இ) கவிஞர் சிற்பி ஈ) பாரதியார்

26. "ஆலும் வேலும் பல்லுக்குறுதி. நாலும் இரண்டும்
சொல்லுக்குறுதி" - இதில் நான்கு,இரண்டு முறையே ________
அ). திருக்குறள், நாலடியார் ஆ). நாலடியார் ,திருக்குறள்
இ). இராமாயணம், திருக்குறள் ஈ). திருக்குறள், சிலப்பதிகாரம்

27. திருக்குறள் முதன் முதலில் அச்சிடப்பட்ட ஆண்டு __ அ) 1912 ஆ) 1812 இ) 2004 ஈ) 1712

28. திருக்குறளுக்கு சிறந்த உரை எழுதியவர் ________
அ) தருமர் ஆ) மணக்குடவர் இ) பரிமேலழகர் ஈ) காளிங்கர்

29. திருக்குறள் என்பது ________
அ) வினைத்தொகை ஆ) பண்புத்தொகை இ) வினையாலணையும் பெயர் ஈ) ஆகுபெயர்

30. சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம் என்னும் ஏமப் புணையச் சுடும் - பயின்று வரும் அணி?
அ) ஏகதேச உருவக அணி ஆ) உவமையணி இ) நிரல் நிறை அணி ஈ).சொற்பொருள் பின்வரு நிலையணி

31. பொருத்துக.

| | |
|---|---|
| அ) கம்பர் யார்? | - 1. இராஜாஜி |
| ஆ) சக்கரவர்த்தி திருமகள் | - 2. சுந்தர ராமசாமி |
| இ) வயிறுகள் | - 3. வ.சுப.மாணிக்கம் |
| ஈ) புளிய மரத்தின் கதை | - 4. பூமணி |

அ) 3,4,1,2 ஆ) 4,3,2,1 இ) 3,1,4,2 ஈ) 1,2,3,4

32. வினைத்தொகைச் சொல்லுக்கிடையில் வல்லினம் மிகக் கூடாது – சான்று தருக.
அ) நாட்டுப்பற்று ஆ) அரபிக்கடல் இ) திருக்குறள் ஈ) திருவளர்செல்வன்

33. ரூபாவதி, கலாவதி ஆகிய நாடக நூல்களை இயற்றியவர் ________
அ) பரிதிமாற் கலைஞர் ஆ) சங்கரதாசு சுவாமிகள் இ) பம்மல் சம்பந்தனார் ஈ) டி.எஸ்.இராசமாணிக்கம்

34. நடுவண் அரசு தமிழ்மொழியை உயர்தனிச் செம்மொழியாக அறிவித்த ஆண்டு ________
அ) 2014 ஆ) 2004 இ) 1994 ஈ) 1974

## II மொழிப்பயிற்சி

3 x 2 = 6

35. கலைச்சொல்லாக்கம் தருக. அ) Tips ஆ) Checkout

36. பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து முறையான தொடர்களாக ஆக்குக.
அ) காலை எழுந்து படித்து நமக்கு நன்மை ஏற்படும். ஆ) மாறன் பேச்சுத்திறன் யார் வெல்ல முடியும்.

37. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.
அ) என்னுடைய நம்பிக்கை முழுவதுமே புதியத் தலைமுறை மீதுதான், அவர்கள் எல்லா பிரச்சினைகளையும் ஒரு சிங்கத்தை போல எதிர்கொண்டு தீர்ப்பார்கள்.